**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

**IA.795/2018 IN OS. No. 27/2015**

Deposition of PW2 solemnly affirmed under Provision Oaths Act 1969 (Act 44 of 1969), the 27th day of February 2023.

| | | | |
|---|---|---|---|
| Name: | குமார் | Religion: | இந்து |
| Father's Name/Husband's Name: | மணித்தேவர் | Caste: | --- |
| Village: | ஆவணிப்பேரூர் கீழ்முகம் | Calling: | சமையல் வேலை |
| Taluk: | எடப்பாடி | Age: | 50 |

**முதல் விசாரணை** (சத்தியபிரமாணத்தின் பேரில்)

நான் மேற்படி மனுவில் மனுதாரர், அசல் வழக்கில் 3ம் தரப்பினர் மற்றும் மா.சா.1. ஆவேன். எனது தரப்பு முதன்மை சாட்சிக்காக பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் அதிலுள்ள சங்கதிகள் நான் கூறியவை தான். அதை நான் படித்து பார்த்து தான் கையொப்பமிட்டுள்ளேன். அதை எனது தரப்பு முதன்மை சாட்சியாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். எனது தரப்பு சான்றாவணங்களாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 15 ஆவணங்களை குறியீடு செய்ய தாக்கல் செய்துள்ளேன். அது மா.சா.ஆ.1 முதல் மா.சா.ஆ.15 ஆக மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றது (ஆவணங்களின் தேதி குறிப்பிடப்படவில்லை என்றும், வழக்கிற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்ட பின்பு தயார் செய்யப்பட்டள்ளதாக கூறி 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபித்ததால் மா.சா.ஆ.1 முதல் மா.சா.ஆ 15 ஆவணங்கள் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்படுகிறது). மனுப்படி உத்தரவுவிடக் கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை:**

எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- குமார்

Sd/- S. உமா மகேஸ்வரி,
சார்பு நீதிபதி, சங்ககிரி.